
## திராவிடத்தால் வாழ்கிறோம்

872

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

**தமிழ்.கா.அமுதரசன்**

9

**கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுப் பூர்வமாக விவரிக்கும் தொடர்!**

# முடிவுக்கு வந்த நில உரிமைப் போராட்டம்!

ஓவியம் : ரவி பேலட்



1970-ஆம் ஆண்டு, நிதிநிலை அறிக்கையில் ‘15 ஸ்டாண்டர்டு ஏக்கர் நில உச்சவரம்புச் சட்டம் கொண்டு வரப்படும்’ என அறிவித்தார் அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர். அறிவித்த அடுத்த நாளே அதற்கான பணிகளைத் தொடங்கி, அடுத்த சில நாட்களில் ( மார்ச் 31 ) சட்டமன்றத்தில் மசோதாவைத் தாக்கல் செய்தார்.

**அந்த மசோதாவில் கூறப்பட்டிருந்ததாவது:**

‘1961-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் நில உச்சவரம்புச் சட்டம் ஒன்று முதன்முதலாகக் கொண்டு வரப்பட்டது. ஐந்து பேர் அடங்கிய ஒரு குடும்பத்திற்கு முப்பது ஏக்கர் என்று அதில் உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அந்தச் சட்டம் அமலுக்கு வந்த பிறகும் நில உறவு முறையில் ஏற்றத் தாழ்வுகள் தொடர்ந்து இருந்து வருகின்றன. மேற்படி சட்டம் அமலாக்கப்பட்ட பிறகும் பொதுநலனுக்கு விரோதமாக சில மனிதர்களிடமே அதிக நிலம் சேர்ந்திருக்கிறது.

நிலச் சீர்திருத்தத்தையொட்டிய மற்றொரு நடவடிக்கையாக இப்பொழுது இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது. நில உறவு முறைகளில், பல ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்க வேண்டுமென்ற குறிக்கோளை எய்தும் பொருட்டு, உச்சவரம்பை 30 ஏக்கரிலிருந்து 15 ஏக்கராகக் குறைக்கவேண்டிய அவசியம் உணரப்பட்டுள்ளது. இந்த மசோதா அந்தக் குறிக்கோளை நிறைவேற்றப் பயன்படும்.

1970- ஆம் ஆண்டு பிப்ரவரி 26-ஆம் தேதி முதல் இந்தச் சட்டம் அமலுக்கு வந்ததாகக் கருதப்படும்’ என முன்தேதியிட்டு சட்டத்தை அமல்படுத்தினார்.

**மாநில சட்டமன்றத்தின் உரிமை**

இந்த மசோதாவுக்கு எதிராக நீதிமன்றத்தில் மட்டும் கலைஞர் போராடவில்லை. சட்டமன்றத்திலும், மக்கள் மன்றத்திலும் அதே உறுதியுடன் நின்றார். மார்ச் 31-ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்ட மசோதா, அவையிலே விவாதத்திற்காக ஏப்ரல் 8-ஆம் தேதி வந்தது. அப்போது, சுதந்திரா கட்சியில் இருந்த சட்டமன்ற உறுப்பினர் ஹண்டே அவர்களும், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திண்டிவனம் ராமமூர்த்தி அவர்களும், ‘குடியரசுத் தலைவரின் அனுமதி பெறாமல் மசோதாவைக் கொண்டு வருவது அரசியல் சட்டத்திற்கு முரணானது’ என்று பிரச்சினையை எழுப்பினர்.

அதற்குப் பதிலளித்து அன்றைய நிதியமைச்சர் மதியழகன் பேசியதை, ‘நெஞ்சுக்கு நீதி’யில் இப்படிப் பதிவு செய்திருக்கிறார் கலைஞர்.

“குடியரசுத் தலைவரின் அனுமதிக்காக முன்பே அனுப்பப்பட்டிருக்கிறது என்றும், முன்கூட்டியே அனுமதி என்பது தேவையில்லை என்றும், இந்தப் பொருள் மாநில அரசுக்குரியதாக வரும் பட்டியலில் இடம் பெற்றதால், இதைத் தன்னிச்சையாகச் செய்யலாம் என்றும், மேலும் குடியரசுத் தலைவரின் அனுமதி பெற வேண்டுமென்றுதான் இருக்கிறதே தவிர, முன்கூட்டியே பெற வேண்டும் என்பதல்ல என்றும், மேலும் மத்திய அரசாங்கத்திடமிருந்து இந்த நிலச் சீர்திருத்த மசோதாவை முன்மொழிய அனுமதி தருகிறோம் என்று தந்தி வந்திருப்பதாகவும், எனவே அரசியல் சட்டத்திற்கு முரணானது எதுவுமில்லை என்றும் கூறினார்” எனப் பதிவு செய்கிறார்.

இந்தச் சட்டம் கொண்டு வருவதில் எந்தவித முறைகேடும் நடைபெற்று விடவில்லை என்று பேரவைத் தலைவர் தனது முடிவை அறிவித்தபின், இந்த மசோதா விவாதத்திற்கு வந்தது. ஆனாலும், ஹண்டே அவர்கள் ‘இந்த மசோதாவை பொதுமக்களின் கருத்தை அறிய சுற்றுக்கு விடவேண்டும்’ என்று வலியுறுத்தினார்.

அப்போது பதில் அளித்த கலைஞர் “இச்சட்டத்தைத் திரும்பப் பெறவேண்டுமென்ற எண்ணத்தில் இந்த அரசு கொண்டுவரவில்லை. அதோடு பொதுமக்களின் கருத்துகளைப் பிரதிபலிக்கும் கட்சித் தலைவர்களின் கருத்துகளையும் பத்திரிகைகளின் கருத்துகளையும் அறிந்து, அதற்கேற்றபடி திருத்தங்கள் செய்துதான் இந்த மசோதா கொண்டு வரப்பட்டுள்ளது” என விரிவாக விளக்கம் அளித்தார்.

**குறுக்குவழிகளுக்கு முற்றுப்புள்ளி**

கலைஞர் கொண்டு வந்த நில உச்சவரம்புச் சட்டத்தின்போது, நில உரிமையாளர்கள் சாமர்த்தியமாக, தங்களது நிலங்களை அறக்கட்டளைகளுக்கு மாற்றிக் கொண்டனர். அப்படிச் செய்வதன் மூலம் நில உரிமை கைவிட்டுப் போகாது பார்த்துக் கொண்டனர். இதன்மூலம் நேரிடையாக விவசாயம் செய்யாமல், குத்தகைதாரர் மூலம் விவசாயம் செய்யலாம். இந்த குறுக்கு வழிக்கும், முற்றுப்புள்ளி வைத்தார் கலைஞர்.

அறக்கட்டளை நிலங்களுக்கும் உச்சவரம்பு கொண்டுவந்ததுடன், சட்டம் அமலுக்கு வந்த தேதிக்குப் பிறகு, அறக்கட்டளைகள் வழி மாற்றப்பட்ட நிலங்கள், உச்சவரம்பு கணக்கிடப்பட்டு உபரி நிலங்கள் சம்பந்தப்பட்ட நில உரிமையாளருக்குச் சென்றுவிடும். அதன்பிறகு, நில உச்சவரம்புச் சட்டத்தின்படி அவருக்காக 15 ஏக்கர் நிலம் கணக்கிடப்பட்டு மீதமிருக்கும் உபரி நிலங்களை அரசு கைப்பற்றியது.

இந்தச் சட்டத் திருத்தத்துக்கு எதிராகப் பண்ணை உரிமையாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். நீதிமன்றங்களில் வழக்கு தொடர்ந்தனர். நிலச் சீரமைப்பு வழக்குகளின் தீர்வை விரைவுபடுத்துவதற்காக தஞ்சாவூரில் நிலத் தீர்ப்பாயம் அமைக்கப்பட்டது.

தவிர, உச்சநீதிமன்றம் வரை சென்ற வழக்குகள் கழக அரசின் உறுதியான வாதங்களால், மாநில சட்டமன்றத்தின் முடிவை உறுதி செய்தன.

அதேகாலகட்டத்தில், குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டத்தை வலுவாக்கி, குத்தகை நிலங்களில் விவசாயம் செய்து வருபவர்களுக்கு அந்த நிலம் உரிமையாக்கப்படும் எனவும் அறிவித்தார் கலைஞர். அதற்காக குத்தகைதாரர் ஆவணங்கள் பதிவதில், வாய்மொழியான தரவுகளைக்கூட பதியலாம் என எளிமையாக்கினார். அதன்மூலம், அந்த நிலங்களில் இருந்து அவர்களை வெளியேற்ற முடியாத பாதுகாப்பை உருவாக்கினார்.

இப்படியாக, தமிழ்நாட்டில் பெரு நில உடைமையாளர்களின் பிடியைத் தளர்த்துவதில் உறுதியாக நின்றார் கலைஞர். 1970-ஆம் ஆண்டு வரை நில மீட்பு இயக்கம் நடத்தி வந்த கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களே, கலைஞர் கொண்டு வந்த நில உச்சவரம்புச் சட்டத்துக்குப் பின்னர், ‘நிலமீட்பு இயக்கப் போராட்டம் முடிந்து விட்டதால், மேற்கொண்டு இந்த இயக்கம் நடத்தப்படாது’ என அறிவித்தனர். அதைச் சாதித்துக் காட்டியவர் தலைவர் கலைஞர்.

> **“கலைஞர் கொண்டு வந்த நில உச்சவரம்புச் சட்டத்துக்குப் பின்னர், ‘நிலமீட்பு இயக்கப் போராட்டம் முடிந்து விட்டதால், மேற்கொண்டு இந்த இயக்கம் நடத்தப்படாது’ என அறிவித்தனர். அதைச் சாதித்துக் காட்டியவர் தலைவர் கலைஞர்.”**

...தொடரும்

## `ழ’ கரத்தை இழிவுபடுத்திய வருணாசிரமம்!

‘தமிழின் சிறப்பு ‘ழ’கரத்தை ‘சூத்திர எழுத்து’ என்று கடந்த 10 நூற்றாண்டுகளாகச் சொல்லி வருகின்ற கொடிய பாவிகள் யார்?’ என எழுத்தாளர் பொ.வேல்சாமி சமூக வலைத்தளப் பதிவில் கேள்வி எழுப்பியுள்ளார்.

“பல நூற்றாண்டுகளாகச் சிறப்புடன் வளம்பெற்று வந்த ‘தமிழ் இலக்கிய வரலாற்றில்’ சனாதன கருத்துகள் ஆதிக்கம் செலுத்திய காலத்திலிருந்து (8,9,10-ஆம் நூற்றாண்டு) தமிழ் இலக்கண கருத்துகளும் இலக்கிய படைப்புகளும் பகுத்தறிவுக்கு ஒவ்வாத காட்டுமிராண்டித்தனமாக மாறிவிட்டன.

வருணம், சாதி என்று மனிதகுலத்தை அதிகாரத்தின் அடிப்படையில் மேலும் கீழுமாகப் பிரித்து, அதனை வாழ்க்கைச் சட்டங்களாக மாற்றியவர்கள் ‘வருணாசிரமவாதிகள்’. அவர்கள் அத்துடன் நில்லாது தமிழ் இலக்கிய, இலக்கண படைப்புகளிலும் அந்த வருணாசிரமத்தை பொருத்திவிட்டதையும் கூறலாம். சான்றாக, தமிழ் எழுத்துகளையும், ஆசிரியப்பா போன்ற தமிழின் பா வகைகளையும் வருணாசிரம அடிப்படையில் பிரித்தார்கள்.

எடுத்துக்காட்டாக, தமிழுக்கே உரிய அழகிய எழுத்தான ‘ழ’ கரத்தை சூத்திர எழுத்து என்று முத்திரைக் குத்தியதும் இந்த ‘ழ’கரம் எருமை வாகனத்தையுடையவனும் மரணத்தின் கடவுளுமான ‘எமனால்’ படைக்கப்பட்டது என்று இலக்கணம் செய்ததும், அத்தகைய பிற்போக்குக் கருத்துகள் கொண்ட நூல்களுக்கு தமிழ் ‘பாட்டியல்’ இலக்கண நூல்கள் என்று பெயரும் கொடுத்துவிட்டனர்.

அகத்தியர், இந்திரகாளியர் என்பவர்களின் பெயரால் 8, 9-ஆம் நூற்றாண்டுகளில் உண்டாக்கப்பட்டவை இத்தகைய கருத்தாக்கங்கள். (மனிதகுலத்தை இழிவுபடுத்துகின்ற இந்தக் கருத்தாக்கத்தை, பெரியபுராணத்தில் சேக்கிழாரும் ஏற்றுக் கொண்டிருப்பது கவனிக்கத்தக்கது.)

10-ஆம் நூற்றாண்டு ‘பன்னிரு பாட்டியல்’ தொடங்கி பதினேழாம் நூற்றாண்டில் ‘இலக்கண விளக்கப் பாட்டியலிலும்’ 19-ஆம் நூற்றாண்டு ‘முத்துவீரியத்திலும்’ நிலைபெற்றுவிட்ட இத்தகைய அபத்த கருத்தாக்கங்களை இன்றுவரை தமிழ் அறிஞர்கள் எவரும் பெரிதாக விமர்சனம் செய்யவில்லை. பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்திலும் ஜைன முனிவரால் எழுதப்பட்ட நன்னூலிலும் இத்தகைய கருத்துகள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது” எனப் பதிவிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



மு.நாச்சிமுத்து



## `மிசா’ கால உணர்ச்சிகளுடன் ஒரு புகைப்படம்!

1976-ஆம் ஆண்டு கழக அரசு கலைக்கப்பட்டு, ‘மிசா’ சட்டம் அமலில் இருந்த காலம், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் திருப்பூர் வருகை தந்தார். அப்போது பல்லடம் ரோடு கணபதிபாளையம் பிரிவில் தலைவருக்குச் சிறப்பான வரவேற்பு கொடுக்கப்பட்டது. அங்கிருந்து நூற்றுக்கணக்கான கழகத் தோழர்கள் இருசக்கர வாகனங்களில் அணிவகுத்து தலைவரை ஊர்வலமாக அழைத்து வந்தோம். குமாரசாமி மண்டபத்தில் கூட்டம் நடைபெற்றது. அப்போது உணர்ச்சி மேலிட, தலைவர் கலைஞருடன் எடுத்துக்கொண்ட புகைப்படம் இது.

**– மு.நாச்சிமுத்து, மாவட்டச் செயலாளர் பகுத்தறிவாளர் கழகம், கழகத் தலைமைப் பொதுக்குழு உறுப்பினர், திருப்பூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## நம் வேர்கள் — கருவூலம்

## தொழிற்சங்கச் செயல்பாடுகளில் நீதிக்கட்சி!

நீதிக்கட்சி ஆட்சி, தொழிலாளர்களுக்கு ஆதரவான ஆட்சியாகவே செயல்பட்டது. பல தொழிலாளர் மாநாடுகளில் டாக்டர் நடேசனார் கலந்துகொண்டு தொழிலாளர்களுக்குச் சாதகமாக அரிய யோசனைகளைக் கூறினார். நீதிக்கட்சி மேயராக இருந்த பாசுதேவ், ராவ் பகதூர் ஆல்பர்ட் ஜேசுதாசன் உள்ளிட்ட நீதிக்கட்சித் தலைவர்கள் தொழிற்சங்கங்களில் பங்குகொண்டு பணியாற்றினர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131